RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




**மாலை தந்தி**
MALAI THANTHI
தமிழால் வெல்வோம்
DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்




சிவகங்கை மலர்-5 இதழ்- 191 ஜூலை.17 2026 வெள்ளிக்கிழமை malaithanthi2020@gmail.com 4 பக்கங்கள் விலை ரூ.5

# “திமுக, அதிமுக, பாஜக இணைந்து ஆட்சி அமைக்க முயற்சி” : அமைச்சர் நிர்மல் குமார்

சென்னை: ஜூலை.17-

“திமுக, அதிமுக,பாஜக ஆகிய கட்சிகள் சேர்ந்து ஆட்சி அமைக்க முயற்சி செய்கிறார்கள். அடுத்த ஒரு வருடத்தில் அதிமுகவும் திமுகவும் கட்சி நடத்த முடியாமல் பாஜகவுடன் கட்சியை இணைத்து விடும்” என அமைச்சர் நிர்மல்குமார் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் பேசும்போது, “தமிழகத்தில் திமுக, அதிமுக, பாஜக ஆகிய கட்சிகள் சேர்ந்து ஆட்சி அமைக்க முயற்சி செய்கின்றன. அடுத்த ஒரு வருடத்தில் அதிமுகவும் திமுகவும் கட்சி நடத்த முடியாமல் பாஜகவுடன் கட்சியை இணைத்துவிடும். அதோடு, ஸ்டாலின் மற்றும் எடப்பாடி குடும்பத்தில் இரண்டு கேபினட் அமைச்சர்கள் வாங்கிக் கொள்ளும் முடிவுக்கும் வரலாம். அவர்களுக்கு கட்சியை நடத்தும் எண்ணமோ, காப்பாற்றும் எண்ணமோ இல்லை.

எம்ஜிஆர் , ஜெயலலிதா ஆகியோர் உருவாக்கிய கட்சியை எடப்பாடி பழனிசாமி அடமானம் வைத்துவிட்டு, இப்போது என்ன செய்வது எனத் தெரியாமல் இருக்கிறார். ஒரு கட்சி, ஒரு கட்சி அலுவலகம், ஒரு லெட்டர் பேட் மட்டும் இருந்தால் போதும் என்று தனது காலத்தை தள்ளக்கூடிய இடத்துக்கு அவர் வந்துவிட்டார். ஸ்டாலினும் அடுத்து என்ன செய்வது; அடுத்து கட்சியை யாரிடம் கொடுப்பது எனத் தெரியாமல் நிற்கிறார்.

தவெக சட்டமன்ற உறுப்பினர்களை 50 கோடிக்கு விலைக்கு வாங்க இன்னும் முயற்சி செய்கிறார்கள்.



தவெக அரசை செயல் இழக்கச் செய்ய வேண்டும் என குறுக்கு வழிகளை பின்பற்றி வருகிறார்கள். பழநி கோயில் நில விவகாரத்தில் சம்பந்தப்பட்ட அனைவரும் கைது செய்யப்படுவார்கள். அந்த நில மோசடிக்கு அரசு எந்த விதத்திலும் துணை போகவில்லை.

பத்திரப்பதிவு துறையில் முன்பு அமைச்சராக இருந்த மூர்த்தி ‘மினிஸ்டர் கட்டிங்’ என பணம் வாங்கினார்; ஒவ்வொரு அலுவலகத்திலும் ஆல் போட்டு ‘மினிஸ்டர் கட்டிங்’ என தொகையை வசூலித்தார். கடந்த ஐந்து ஆண்டுகளாக இரவு 9 மணி வரை நடைபெற்ற பத்திரப்பதிவு நடைமுறைகள், தற்போது முழுமையாகச் சீரமைக்கப்பட்டுள்ளன. புதிய மாற்றங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன.

இனி பத்திரப்பதிவு முறையில் முறைகேடு அல்லது ஊழலில் ஈடுபடும் யாராக இருந்தாலும் பாரபட்சமின்றி கைது செய்யப்படுவார்கள். அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

நாகர்கோயில் சம்பவத்தில் சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படும். சம்பவத்தில் தொடர்புடையவர்கள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. யாரையும் காப்பாற்றும் எண்ணம் இல்லை. சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படுவதில் அரசு உறுதியாக உள்ளது. முதல்வர் விஜய் இது குறித்து வலியுறுத்தியுள்ளார். சபரிவர்மன் குடும்பத்தினரை விரைவில் அமைச்சர்கள் சந்திப்பார்கள்.

எந்த துறையிலும் லஞ்சம் கேட்பதாக புகார் அளித்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். தவெக ஆட்சியில் கமிஷனே கிடையாது. மேகேதாட்டு அணை கட்ட 100 சதவிகிதம் அனுமதிக்க மாட்டோம். இவ்விஷயத்தில் சட்டப்படி தான் நடவடிக்கை எடுக்க முடியும்” என்று அவர் கூறினார்.

# சி.விஜயபாஸ்கர், எம்.ஆர்.விஜயபாஸ்கர் ராஜினாமா ஏற்பு விவகாரம்

## பேரவைச் செயலர் பதிலளிக்க ஐகோர்ட் உத்தரவு

சென்னை: ஜூலை.17-

அதிமுக முன்னாள் அமைச்சர்கள் சி.விஜயபாஸ்கர், எம்.ஆர். விஜயபாஸ்கர் ஆகியோர் ராஜினாமா செய்ததை ஏற்று சபாநாயகர் பிறப்பித்த உத்தரவை ரத்து செய்யக் கோரி அதிமுக கொறடா அக்ரி கிருஷ்ணமூர்த்தி சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களுக்கு பதிலளிக்க, சட்டப்பேரவை செயலாளருக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.



நடந்து முடிந்த சட்டமன்ற தேர்தலில் விராலிமலை மற்றும் கரூர் தொகுதிகளில் வெற்றி பெற்ற அதிமுக எம்எல்ஏகள் சி.விஜயபாஸ்கர், எம்.ஆர்.விஜயபாஸ்கர் ஆகியோர், தங்கள் எம்எல்ஏ பதவிகளை ராஜினாமா செய்து, தவெகவில் இணைந்துள்ளனர்.

இதனிடையே, அவர்களின் ராஜினாமாவை ஏற்று சபாநாயகர் பிறப்பித்த உத்தரவை ரத்து செய்யக்கோரி அதிமுக கொறடா அக்ரி கிருஷ்ணமூர்த்தி சார்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. அதில், தகுதி நீக்க நடவடிக்கை நிலுவையில் இருக்கும் போது, இருவரின் ராஜினாமாவை சபாநாயகர் ஏற்றுக்கொண்டது தவறானது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், சபாநாயகர், மனதை செலுத்தாமல் இயந்திர தனமாக முடிவெடுத்துள்ளதால், இந்த விவகாரத்தில் நீதிமன்றம் தலையிட வேண்டும் என கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது.

சபாநாயகரின் முடிவு அரசியல் சாசனம் மற்றும் இயற்கை விதிகளுக்கு எதிரானது எனவும் இந்த மனு மீது இறுதி முடிவெடுக்கும் வரை விராலிமலை மற்றும் கரூர் தொகுதிகள் காலியானதாக அறிவிக்கப்பட்ட விவகாரத்தில் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க இடைக்கால தடை விதிக்க வேண்டுமெனவும் மனுவில் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது.

இந்த மனுக்களை விசாரித்த தலைமை நீதிபதி சுஷ்ருத் அரவிந்த் தர்மாதிகாரி மற்றும் நீதிபதி ஜி.அருள்முருகன் அமர்வு, சட்டமன்ற செயலாளர் மற்றும் சி.விஜயபாஸ்கர், எம்.ஆர்.விஜயபாஸ்கர் உள்ளிட்டோர் பதிலளிக்க உத்தரவிட்டுள்ளது.

ஏற்கனவே நான்கு எம் எல்.ஏக்கள் ராஜினாவை ஏற்றதை எதிர்த்த வழக்குகளுடன், இந்த இரு வழக்குகளையும் சேர்த்து விசாரணைக்கு பட்டியலிட உத்தரவிட்ட நீதிபதிகள் விசாரணையை ஜூலை 22ம் தேதிக்கு தள்ளிவைத்தனர்.

# தமிழகத்தில் ‘ரெஸ்டாரோ பார்களை’ அதிகரிக்க அரசு திட்டம்!

சென்னை, ஜூலை.17-

தமிழகத்தில் தற்போது செயல்பட்டு வரும் சாதாரண டாஸ்மாக் பார்களின் எண்ணிக்கையைக் கணிசமாகக் குறைத்து, அதற்குப் பதிலாக உணவகங்களுடன் கூடிய நவீன 'ரெஸ்ட்ரோ பார்' வசதிகளை மாநிலம் முழுவதும் விரிவுபடுத்த டாஸ்மாக் நிர்வாகம் திட்டமிட்டு வருகிறது.

சமீபத்தில் உரிமக் காலம் முடிவடைந்ததை ஒட்டி தமிழகம் முழுவதும் 2,300க்கும் மேற்பட்ட டாஸ்மாக் பார்கள் மூடப்பட்டன. இதனால் ஏற்படும் வருவாய் இழப்பை ஈடு செய்யவும், பார்களில் நடக்கும் முறைகேடுகளைத் தடுத்து அரசுக்கான வருவாயை முறைப்படுத்தவும் இந்த புதிய வணிக மாதிரியைத் டாஸ்மாக் நிர்வாகம் தீவிரமாகப் பரிசீலித்து வருகிறது.

சாதாரண பார்களில் உள்ள சுகாதாரமற்ற சூழலை மாற்றி, நுகர்வோருக்குத் தரமான உணவு மற்றும் பாதுகாப்பான வசதிகளுடன் கூடிய நவீன உணவக பார்கள் உருவாக்கப்படும். இந்த ரெஸ்ட்ரோ பார்களுக்கு வாட் வரிகள் விதிக்கப்படுவதன் மூலம், அரசுக்குக் கிடைக்க வேண்டிய வரி வருவாய் கணிசமாக உயரும்.

உரிமம் இல்லாத பார்கள் மற்றும் கூடுதல் விலைக்கு மது விற்பனை செய்வது போன்ற சட்டவிரோதச் செயல்களை இந்தத் திட்டத்தின் மூலம் கட்டுப்படுத்த முடியும் என அதிகாரிகள் நம்புகின்றனர்.

அண்மையில் நுகர்வோரின் விருப்பத்திற்காக 54 புதிய மதுபான வகைகளை அறிமுகம் செய்யத் திட்டமிட்டுள்ள டாஸ்மாக் நிர்வாகம், தற்போது பார்களின் உள்கட்டமைப்பிலும் இத்தகைய நவீன மாற்றங்களைக் கொண்டு வர உத்தேசித்துள்ளது குடிமகன்கள் மற்றும் வர்த்தக வட்டாரத்தில் பரவலாகப் பேசப்பட்டு வருகிறது.

# சி.வி. சண்முகத்தின் ஆதரவாளர்கள் 11 பேர் அ.தி.மு.க., கட்சி பதவியில் இருந்து நீக்கம்

சென்னை, ஜூலை.17-

விழுப்புரம் மாவட்டத்தில் சி.வி.சண் முகம் ஆத ரவாளர் களுக்கும், மாவட்ட செயலாளர் பசுபதி ஆதரவாளர்களுக்கும் இடையே அடிக்கடி மோதல் ஏற்பட்டு வந்த நிலையில் தற்போது சி.வி.சண்முகம் ஆதரவாளர்களின் கட்சி பதவிகள் பறிக்கப்பட்டுள்ளது.

கடந்த 9ம் தேதி நடந்த விழுப்புரம் அதிமுக செயல்வீரர்கள் கூட்டத்தில் மாவட்ட செயலாளர் பசுபதி ஆதரவாளர்களுக்கும், சி.வி.சண்முகம் ஆதரவாளர்களுக்கும் இடையே கடும் மோதல் ஏற்பட்டது. கார் மீது கல்வீச்சு, மறியல் போராட்டம் நடந்தது. இரு தரப்பினருக்கும் இடையே கடும் மோதல் ஏற்பட்டது. இதையடுத்து இதுதொடர்பாக அதிமுக கட்சி பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி சி.வி.சண்முகம் ஆதரவாளர்களை கட்சியில் இருந்து நீக்கி நடவடிக்கை எடுத்துள்ளார்.



அதன்படி, விழுப்புரம் மாவட்டத்தில் சி.வி. சண்முகத்தின் ஆதரவாளர்கள் 11 பேரை கட்சி பொறுப்பிலுருந்து நீக்கி பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி அறிவிப்பு வெளியிட்டுள்ளார். இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

விழுப்புரம் மாவட்ட கழக இணை செயலாளராக இருந்த ஆனந்தி, மாவட்ட பொருளாளராக இருந்த கே.வி.என்.வெங்கடேசன், மாவட்ட இளைஞர் பாசறை, இளம்பெண்கள் பாசறை செயலாளராக உள்ள ஜெயபிரகாஷ், மாவட்ட அண்ணா தொழிற்சங்க செயலாளர் பாஸ்கரன், விழுப்புரம் மண்டல தகவல் தொழில்நுட்ப பிரிவு இணை செயலாளர் எழில்ராஜ், வல்லம் தெற்கு ஒன்றிய செயலாளர் நடராஜன் என்ற கிருஷ்ணன், மயிலம் மேற்கு ஒன்றிய செயலாளர் விஜயன், ஒலக்கூர் மேற்கு ஒன்றிய செயலாளர் கிருஷ்ணமூர்த்தி, ஒலக்கூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் பன்னீர், திண்டிவனம் நகர செயலாளர் ரூபன்ராஜ், மயிலம் மேற்கு ஒன்றிய எம்.ஜி.ஆர். மன்ற செயலாளர் செந்தில்குமார் ஆகியோர் இன்று முதல் அவரவர் வகித்து வரும் பொறுப்புகளில் இருந்து விடுவிக்கப்படுகிறார்கள். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.


இந்த நடவடிக்கைக்கு சி.வி.சண்முகம் ஆதரவாளர்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். விழுப்புரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# மதுரை உள்ளிட்ட 12 மாவட்ட அரசு பள்ளிகளுக்கு புதிய கட்டிடங்கள் கோரிய வழக்கு: ஆய்வுக்கு ஐகோர்ட் உத்தரவு

மதுரை: ஜூலை.17-

மதுரை உள்ளிட்ட 12 மாவட்டங்களில் அரசு பள்ளிகளில் சேதமடைந்த கட்டிடங்களை பழுது பார்க்கவும், புதிய கட்டிடங்களை கட்டக்கோரிய வழக்கில், அரசு பள்ளி கட்டிடங்களை ஆய்வு செய்ய உயர் நீதிமன்றக் கிளை உத்தரவிட்டுள்ளது.

புதுக்கோட்டை வல்லாதிரக்கோட்டையைச் சேர்ந்த முருகானந்தம் என்பவர் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனுவில், “விருதுநகர், திருச்சி, நெல்லை, திண்டுக்கல், கரூர், தஞ்சை, ராமநாதபுரம், புதுக்கோட்டை, மதுரை, தேனி, தென்காசி, தூத்துக்குடி உள்ளிட்ட 12 மாவட்ட அரசு பள்ளி கட்டிடங்க சேதங்கள், தேவைகள் தொடர்பாக தகவலறியும் உரிமைச் சட்டத்தில் கேள்வி எழுப்பிய போது, பெரும்பாலான அரசுப் பள்ளிகளில் கட்டிடங்களில் சேதம் இருப்பது உறுதியாகி உள்ளது.



வகுப்பறை, சமையலறை, கழிவறை, சுற்றுச்சுவர், குடிநீர் வசதி போன்றவை பல பள்ளிகளுக்கு தேவையாக உள்ளன. பள்ளிக் கட்டிடங்கள் மற்றும் சுற்றுச்சுவர் சேதமடைந்த நிலையில் இருப்பதால் குழந்தைகளின் உயிருக்கு ஆபத்து உள்ளது. மாவட்ட கல்வி அலுவலர்கள் பள்ளிகளை அவ்வப்போது ஆய்வு செய்து அவை தரமானதாகவும் சுத்தமானதாகவும் இருப்பதை உறுதி செய்திருக்க வேண்டும்.

பருவ மழை தொடங்க உள்ள நிலையில் சேதம் அடைந்த பள்ளிகளை உடனடியாக சரி செய்வதோடு முறையான பாதுகாப்பு ஏற்பாடுகளையும், அடிப்படை வசதிகளையும் முன்னெடுப்பது அவசியம். எனவே சேதமடைந்த மற்றும் பயன்பாட்டிற்கு தகுதியற்ற பள்ளி கட்டிடங்கள், கழிப்பறைகள், சமையலறைக் கட்டிடங்கள், சுற்றுச்சுவர் மற்றும் அங்கன்வாடி கட்டிடங்களை பழுது பார்க்கவும், இடிக்கப்பட்டு அகற்றப்பட வேண்டிய கட்டிடங்களுக்கு மாற்றாக புதிய கட்டிடங்களை கட்டவும், மாணவர்களுக்கு தேவையான கூடுதல் பள்ளி கட்டிடங்கள், கழிப்பறை, சமையலறை, சுற்றுச்சுவர் போன்றவற்றை குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் கட்டி முடிக்கவும் உத்தரவிட வேண்டும்” இவ்வாறு மனுவில் கூறியிருந்தார்.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள் கார்த்திகேயன், சக்திவேல் அமர்வு, "தென் மண்டலத்தில் உள்ள 12 மாவட்ட தலைமை கல்வி அலுவலர்கள், தங்களது கட்டுப்பாட்டில் உள்ள ஒவ்வொரு பள்ளியையும் மாவட்ட கல்வி அலுவலர்கள் மூலம் நேரடியாக ஆய்வு செய்ய அறிவுறுத்த வேண்டும். மேலும், சுகாதாரம், தூய்மை மற்றும் பிற அடிப்படை வசதிகள் தொடர்பாக பள்ளி தலைமை ஆசிரியர்களிடம் இருந்து அறிக்கைகளை பெற்று அவற்றை தொகுத்து தலைமை கல்வி அலுவலர்கள் நீதிமன்றத்தில் அறிக்கையாக தாக்கல் செய்ய வேண்டும்.

குறிப்பாக குடிநீர், வடிகால் வசதி, பள்ளியை சுற்றி புதர்கள் அல்லது களைகள் உள்ளனவா ? என்பன தொடர்பான விபரங்களும் தெளிவாக அறிக்கையில் தெரிவிக்கப்பட வேண்டும். ஆகஸ்ட் 24ம் தேதிக்குள்ளாக இந்த அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும். கண்டறியப்படும் குறைபாடுகளில் உடனே சரி செய்யப்பட வேண்டிய தேவை இருப்பின், நீதிமன்ற உத்தரவுக்காக காத்திருக்காமல் தலைமை கல்வி அலுவலர்கள் தேவையான பணிகளை மேற்கொண்டு அவற்றை சரி செய்து அது தொடர்பான அறிக்கையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும்.

பள்ளிகளை தூய்மையாக பராமரிக்க தற்காலிக தூய்மை பணியாளர்களை நியமிக்க சாத்திய கூறுகள் உள்ளதா? என்பது குறித்தும் தமிழக பள்ளிக் கல்வித்துறை முதன்மைச் செயலர் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும்” என்று கூறிய நீதிபதிகள் வழக்கு விசாரணையை ஒத்திவைத்து உத்தரவிட்டனர்.



## ஊத்துக்கோட்டை பேரூர் த.வெ.க. சார்பில் பேரூர் செயலாளர் பிரசாந்த் தலைமையில் காமராஜர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது

திருவள்ளூர், ஜூலை.17-

திருவள்ளூர் மாவட்டம் ஊத்துக்கோட்டையில் அறிஞர் அண்ணா பேருந்து நிலையம் அருகில் உள்ள காமராஜர் திருவுருவ சிலைக்கு 124 வது ஆண்டு பிறந்தநாளை முன்னிட்டு தமிழக வெற்றி கழகம் சார்பில் அக்கட்சியின் ஊத்தூக்கோட்டை பேரூர் செயலாளர் யோகபிரசாந்த் தலைமையில் இணைச் செயலாளர் ஆ.ராஜேஷ் பொருலாளர் பாலாஜி துணைச்செயலாளர் ஷி.பூவரசன் முன்னிலையில் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது இந்நிகழ்வில் ஊத்துக்கோட்டை பேரூர் நிர்வாகிகள் கரண், சுரேந்தர், ஷேக், மோகன், பாசில், ஜீவா, மணி, சதீஷ், கௌதம், கலைஞர்நகர் பிரகாஷ், கலந்து கொண்டு மலர் தூவி மரியாதை செலுத்தி பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கினார்கள்

## குன்னூர் பிராவிடென்ஸ் மகளிர் கல்லூரியின் பிரெஞ்சுத் துறை சார்பில் சிறப்புச் சொற்பொழிவு



நீலகிரி, ஜூலை.17-

பிரெஞ்சு தேசிய தினத்தை முன்னிட்டு குன்னூர் பிராவிடென்ஸ் மகளிர் கல்லூரியின் பிரெஞ்சுத் துறை சார்பில் சிறப்புச் சொற்பொழிவு நடைபெற்றது. நிகழ்ச்சியின் முதன்மை விருந்தினராக 'லிம்பா பிரான்செசா' அமைப்பின் இயக்குநரும், ஸ்டேன்ஸ் ஆங்கிலோ இந்திய மேல்நிலைப் பள்ளி ஆசிரியருமான தமிழ்மணி கலந்துகொண்டார். அவர் பேசுகையில், பிரெஞ்சு மொழியைக் கற்பதன் நன்மைகள் குறித்தும், அது எவ்வாறு உலகளாவிய வணிக மொழியாகத் திகழ்கிறது என்றும் விளக்கினார். மேலும், சர்வதேச சந்தையில் பிரெஞ்சு மொழி தெரிந்தவர்களுக்கான வேலைவாய்ப்புகள் மற்றும் அதன் எதிர்காலம் குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார். சிறப்பு விருந்தினராக நீலகிரி மாவட்டத்தின் செயின்ட் ஹில்டாஸ், யுனிக் பப்ளிக் பள்ளி மற்றும் கிரசண்ட் மெட்ரிக் பள்ளி ஆகியவற்றின் பிரெஞ்சு மொழி ஆலோசகர் பிரார்த்தனா பாலாஜி பங்கேற்றார். அவர் பாஸ்டில் தினத்தின் வரலாற்றுப் பின்னணி மற்றும் அது பிரெஞ்சு புரட்சியின் போக்கை எவ்வாறு மாற்றியமைத்தது என்பது குறித்துப் பேசினார். கல்லூரியின் பிரெஞ்சுத் துறை உதவிப் பேராசிரியரும், இந்நிகழ்ச்சியின் ஒருங்கிணைப்பாளருமான டாக்டர் சிந்தியா ஜார்ஜ், பிரான்ஸ் நாட்டின் தாரக மந்திரமான 'சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்' ஆகியவை பிரான்ஸ் மட்டுமின்றி இந்திய அரசியலமைப்பிற்கும் தூண்களாக விளங்குவதை சுட்டிக்காட்டினார். மேலும், மாணவர்கள் எதையும் அப்படியே நம்பாமல், சிந்தித்து உண்மைகளை ஆராய வேண்டும் என ஊக்கப்படுத்தினார். முன்னதாக, கல்லூரியின் செயலர் அருட்சகோதரி அல்போன்சா மற்றும் துணை முதல்வர் அருட்சகோதரி முனைவர் செல்வி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இந்நிகழ்ச்சியில் பேராசிரியர்கள் மற்றும் மாணவிகள் பலர் கலந்துகொண்டனர்.







## ரெட்ஹில்ஸ் வட்டார நாடார் ஐக்கிய சங்கம் சார்பில் 1500க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கல்

மாதவரம், ஜூலை.17-

மாதவரம் தொகுதி செங்குன்றத்தில் ரெட்ஹில்ஸ் வட்டார நாடார் ஐக்கிய சங்கம் சார்பில் தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் கர்மவீரர் காமராஜரின் 124வது பிறந்தநாளை முன்னிட்டு செங்குன்றம் பஜார் அருகே அமைந்துள்ள காமராஜர் திருவுருவச் சிலைக்கு மலர்மாலை அணிவித்து மரியாதை செய்து காமராஜர் சிலை மற்றும் செங்குன்றம் அண்ணா பேருந்து நிலையம் எதிரே ஆகிய இரு இடங்களில் சுமார் 1500க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு அறுசுவை அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி சங்கத் தலைவர் பால கிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது.ஆலோசகர் குணபாண்டியன், செயலாளர் சீனிவாசன், பொருளாளர் பழனிச்சாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்நிகழ்ச்சியில் சங்கத் துணைத் தலைவர்கள் டபிள்யூ.ஹேமில்டன், செல்வம், கண்ணன், துணைச் செயலாளர்கள் கணேஷ் பாலாஜி, பூபதி, பாபு (எ) முனிரத்தினம், செயற்குழு உறுப்பினர்கள் சண்முகராஜ், கேசவன், முருகன், சேகர், ரத்னகுமார், லிங்கேஸ்வரன், என்.லிங்கேஸ்வரன், மணிராஜ், கனகராஜ், ரத்தினபாண்டியன், குருசாமி, ஜான்சன் கென்னடி, ஆர்த்திராஜா, சிவக்குமார், சிவக்குமார், சண்முகசுந்தரம், குமரன், நாராயணன், கணக்கு தணிக்கையாளர் செந்தில்குமார், சட்ட ஆலோசகர்கள் சண்முகசுந்தர பெருமாள், கிரிஸ்பின் ராஜ் உள்ளிட்ட சங்க நிர்வாகிகள் உறுப்பினர்கள் திரளாக கலந்துகொண்டனர்.





■ தேனி மாவட்டத்திற்கு அனுமதி பெறப்பட்டுள்ள கேந்திரிய வித்யாலயாப் பள்ளியில் (KV School) ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை சேர்க்கை தொடங்குவதற்கு மாணவ மாணவியர்களிடம் விண்ணப்பம் பெறும் வகையில் முதல் தேனிஅல்லிநகரம் நகராட்சி தொடக்கப்பள்ளியில் விண்ணப்பங்கள் பெறப்பட்டு வருவதை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், நேரில் பார்வையிட்டார். விண்ணப்பங்கள் வழங்க பொதுமக்கள் அதிக எண்ணிக்கையில் வருகைதருவதையொட்டி கூடுதலாக உதவிமையம் (counter) அமைக்க அறிவுறுத்தியதுடன், குடிநீர் வசதி உள்ளிட்ட தேவைகளை நகராட்சி நிர்வாகம் மூலம் மேற்கொள்ள அறிவுறுத்தினார். மேலும், கேந்திரிய வித்யாலயாப் பள்ளி முதல்வரிடம் பொதுமக்கள் எவ்வித சிரமமின்றி விண்ணப்பங்களை வழங்கிச் செல்லும் வகையில் கூடுதலாகப் பணியாளர்களை நியமிக்குமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், அறிவுறுத்தினார்.



## ஊத்துக்கோட்டை வாழ் நாடார் சங்கம் மற்றும் நற்பணி மன்றம் சார்பில் காமராஜர் 124ம் ஆண்டு பிறந்தநாள் விழா

திருவள்ளூர், ஜூலை.17-

திருவள்ளூர் மாவட்டம் ஊத்க்கோட்டை வாழ் நாடார் சங்கம் மற்றும் காமராஜர் நற்பணி மன்றம் சார்பில் காமராஜரின் 124வது ஆண்டு பிறந்த நாளை முன்னிட்டு ஏழை எளிய மாணவி மாணவர்களுக்கான கல்வி உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது சங்கத்தின் தலைவர் எம்.செல்வகுமார் மற்றும் செல்வ விநாயகம், ராபர்ட், ஜான்சன்,ஆறுமுக நாடார், அதரியான்ஸ், அகஸ்டின், நியூட்டன், ஜெகன், புஷ்பராஜ், கர்னல், மற்றும் நற்பணி மன்ற நிர்வாகிகள் மணிகண்டன், சீனிவாசன், சேவியர், ஒருங்கிணைப்பில் காமராஜர் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தி ஏழை எளிய பள்ளி மாணவ மாணவிகளுக்கு நோட்டுப் புத்தகம் பேனா பள்ளி பேக் மற்றும் இனிப்புகள் வழங்கினார்கள் இந்நிகழ்வில் லயன்ஸ் கிளப் சங்க நிர்வாகிகள் தலைவர் சிட்டிபாபு செயலாளர் சரவணன் பொருலாளர் டி.ஆர் சுரேஷ் கலந்து கொண்டு மலர் தூவி மறியாதை செலுத்தி சிறப்பித்தனர்





■ கன்னியாகுமரி மாவட்டம் தென்தாமரைகுளம் எல்.எம்.எஸ் மேல்நிலைப் பள்ளியில் காமராஜரின் 124 வது பிறந்த தின விழா கல்வி வளர்ச்சி நாளாக விமர்சையாக கொண்டாடப்பட்டது. நிகழ்ச்சிக்கு பள்ளி தாளாளர் கால்வின் தலைமை வகித்தார். தலைமை ஆசிரியை அனு ஜே ப்ரீத்தா முன்னிலை வகித்தார். நிகழ்ச்சியில் மாணவ மாணவிகளின் பேச்சு, பாடல், நடனம் உள்ளிட்ட கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது.போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. ஆசிரியை ஜான்சி ரீட்டா வரவேற்றார். ஆசிரிய செயலாளர் சாந்தி மார்கிரட் நன்றி கூறினார். ஆசிரியை ஆன்லின் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினார்



## பழனிசெட்டிபட்டி பேரூராட்சியில் செயல்பட்டு வரும் அறிவுசார் மையத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் நேரில் ஆய்வு

தேனி, ஜூலை.17-

தேனி மாவட்டம், பழனிசெட்டிபட்டி பேரூராட்சியில் செயல்பட்டு வரும் அறிவுசார் மையத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், 14.07.2026 அன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். அதனைத் தொடர்ந்து, அதே பகுதியில் செயல்பட்டு வரும் தோழி விடுதியையும் பார்வையிட்டு, அங்கு தங்கியுள்ள அரசுப் பணியாளர்கள் மற்றும் கல்லூரி மாணவிகளிடம் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் அடிப்படைத் தேவைகள் குறித்து கேட்டறிந்ததுடன், அவர்கள் முன்வைத்த கோரிக்கைகளான சாலை வசதி, கூடுதல் தெருவிளக்குகள் அமைத்தல், பேருந்து நிறுத்தம் ஏற்படுத்துதல் மற்றும் கூடுதல் பேருந்து வசதி உள்ளிட்ட கோரிக்கைகளுக்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவித்ததுடன், பேரூராட்சி நிர்வாகம் மூலம் கூடுதலாக தெருவிளக்குகள் அமைக்க உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் மரு. இரா.வைத்திநாதன், உத்தரவிட்டார். இந்த ஆய்வின் போது, பழனிசெட்டிபட்டி பேரூராட்சித்தலை வர்மிதுன் சக்கரவர்த்திமாவட்ட சமூக நல அலுவலர் விஷ்ணுபிரியா, செயல் அலுவலர் (பழனிசெட்டிபட்டி) யோகஸ்ரீ உட்பட அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.


## "உங்களை தேடி உங்கள் ஊரில்" திட்டத்தின் கீழ், மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு , நீலகிரி மாவட்டம் பந்தலூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற சிறப்பு முகாமில் பொதுமக்களிடமிருந்து பல்வேறு கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டார்





நீலகிரிபந்தலூர், ஜூலை.17-

"உங்களை தேடி உங்கள் ஊரில்" திட்டத்தின் கீழ், மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு பந்தலூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற சிறப்பு முகாமில் பொதுமக்களிடமிருந்து பல்வேறு கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டார். தமிழ்நாடு முதலமைச்சர் வழிகாட்டுதலின்படி, மக்களை நாடி மக்களின் குறைகளை கேட்டு உடனுக்குடன் தீர்வு காணும் வகையில் "உங்களை தேடி உங்கள் ஊரில்" திட்ட முகாம் பந்தலூர் வட்டாட்சியர் அலுவலகத்தில நடைபெற்றது. இம்முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் பொதுமக்களிடமிருந்து பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுக்களை பெற்று கொண்டு, துறை சார்ந்த அலுவலர்களிடம் வழங்கி, அதன் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தினார். அதனை தொடர்ந்து, மாவட்ட ஆட்சித்தலைவர் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையின் சமூக பாதுபாப்பு திட்டத்தின் கீழ் சார்பில் 4 பயனாளிகளுக்கு ரூ.1.42 இலட்சம் மதிப்பீட்டில் இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கு உதவித்தொகை பெறுவதற்கான ஆணையினையும், 13 பயனாளிகளுக்கு ரூ.65,000/ மதிப்பில் புதிய மின்னனு குடும்ப அட்டைகளையும் என மொத்தம் 17 பயனாளிகளுக்கு ரூ.2.07 இலட்சம் மதிப்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.முன்னதாக, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் உங்களை தேடி உங்கள் ஊரில்" திட்டத்தின் கீழ் பந்தலூர் வட்டாட்சியர் அலுவலகத்தில், நடைபெற்ற பல்வேறு அரசுத்துறை அலுவலர்களுடனான ஆய்வு கூட்டத்தில், பந்தலூர் வட்டத்திற்குட்பட்ட பகுதியில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சி திட்டபணிகள் குறித்து துறை வாரியாக விரிவாக ஆய்வு மேற்கொண்டார். மேலும், பொதுமக்களின் அடிப்படை தேவைகளை முறையாக நிறைவேற்ற வேண்டும் என அலுவலர்களுக்கு அறிவுறுத் தினார்.இக்கூட்டத்தி ல், மாவட்ட வன அலுவலர் ( கூடலூர்) தேவராஜ் திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) ரூபன்சங்கர்ராஜ், கூடலூர் வருவாய் கோட்டாட்சியர் குணசேகரன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) லோகநாயகி, வட்டார வளர்ச்சி அலுவலர் பிரகாஷ், பந்தலூர் வட்டாட்சியர் துரைசாமி உட்பட அரசுத்துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.





# காமராஜர் பிறந்த நாள் விழா பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கல்

மாதவரம், ஜூலை.17-

மாதவரம் தொகுதி செங்குன்றம் அடுத்த காந்திநகரில் மறைந்த முன்னாள் தமிழக முதல்வர் காமராஜரின் 124ம் ஆண்டு பிறந்த நாள் விழா காந்திநகர் நாடார் சங்கம் சார்பில் சங்க தலைவர் மனோகரன் தலைமையில் காமராஜரின் திருஉருவ படத்திற்கு மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். பின்னர் சங்க செயலாளர் தனசேகரன், பொருலாளர் சுரேஷ் ஆகியோர் பொதுமக்களுக்கு அறுசுவை அன்னதானம் மற்றும் இனிப்புகளை வழங்கினர். இதில் துணைத்தலைவர்கள் முருகேசன், ஞானராஜ், துணை செயலாளர்கள் ஞானசேகர், ஆர்த்திராஜா மற்றும் கௌரவ ஆலோசகர்கள் சேவியர், பாண்டியதங்கம், செந்தில்கனி, கணக்கு தணிக்கையாளர் தனுஷ்கோடி ,செயற்குழு உறுப்பினர்கள் தாமரைக்கனி, கஸ்பார், செல்வராஜ், ஜெயபால், விமல்ராஜ், சேகர் உள்ளிட்ட சங்க பொறுப்பாளர்கள் கலந்துகொண்டனர்



# செங்குன்றம் காமராஜர் பிறந்த நாள்விழா பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கல்

மாதவரம், ஜூலை.17-

மாதவரம் தொகுதி செங்குன்றத்தில் உள்ள காமராஜர் மருத்துவமனை வளாகத்தில் செங்குன்றம் வட்டார நாடார் இளைஞர் அணி சார்பில் முன்னாள் தமிழ்நாடு முதல்வர் பெருந்தலைவர் காமராஜரின் 124வது பிறந்தநாளை முன்னிட்டு காமராஜர் மருத்துவமனை வளாகத்தில் அமைந்துள்ள காமராஜர் திருவுருவச் சிலைக்கும் மற்றும் செங்குன்றம் பஜார் அருகே உள்ள காமராஜர் சிலைக்கும் மலர்மாலை அணிவித்து மரியாதை செய்தனர்.பின்னர் சுமார் 500க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு அறுசுவை அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி செங்குன்றம் காமராஜர் இலவச கண் மருத்துவமனை வளாகத்தில் இளைஞர் அணி தலைவர் ஜெ.பால்ராஜ் தலைமையில் நடைபெற்றது.செயலாளர் ராஜேஷ், சுந்தரமூர்த்தி, கௌரவ ஆலோசகர்கள் செல்வம், பொன்னுவேல் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.இதில் துணைத் தலைவர்கள் சதீஷ்குமார், காமாட்சிராஜன், துணைச் செயலாளர்கள் ஜோதிமணி, கந்தசாமி (எ) குரு, செயற்குழு உறுப்பினர்கள் ராஜா, சேர்மராஜன், தங்கவடிவேல், ராஜ் குமார், ஆனந்தசீனிவாசன், பிரபாகரன், கோகுல்ராஜ், சரவணன், தினேஷ் பாண்டியன், மன்னராஜ் மற்றும் காமராஜர் மருத்துவமனை மருத்து வர்கள், செவிலியர்கள் உட்பட பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



# தேனி மாவட்ட அளவிலான ஈரநில கண்காணிப்புக் குழு உறுப்பினர்களுக்கான பயிலரங்கம்

தேனி, ஜூலை.17-

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் மாவட்ட அளவிலான ஈரநில கண்காணிப்புக் குழு உறுப்பினர்களுக்கான பயிலரங்கம் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன் தலைமையில், தமிழ்நாடு ஈரநில மேலாண்மை ஆணையத்தின் உதவி திட்ட இயக்குநர் அகெல்லா சைதன்யா மாதவுடு முன்னிலையில் நடைபெற்றது.

இப்பயிலரங்கில், ஈரநிலங்கள் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை விதிகள் 2017இன் கீழ் ஈரநிலங்களுக்கான அறிவிப்பு வெளியிடும் செயல்முறையில் அடங்கியுள்ள நடைமுறைகள், ஆவணப்படுத்துதல் மற்றும் சட்ட ரீதியான தேவைகள் குறித்து மாவட்ட ஈரநில மேலாண்மைக் குழு உறுப்பினர்களுக்கு தமிழ்நாடு ஈரநில மேலாண்மை ஆணையத்தின் உதவி திட்ட இயக்குநர் அகெல்லா சைதன்யா மாதவுடு எடுத்துரைத்தார். இந்நிகழ்வில், மாவட்ட வருவாய் அலுவலர் ப.ராஜகுமார், உதவி வன பாதுகாவலர் சாய்சரண் ரெட்டி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) இராமகிருஷ்ணன் மற்றும் குழு உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# புழல் ஸ்ரீ நல்லழகு நாடார் பாலிடெக்னிக் கல்லூரியில் பெருந்தலைவர் காமராஜரின் 124வது பிறந்த நாள் விழா






மாதவரம், ஜூலை.17-

மாதவரம் தொகுதி புழல் ஒன்றியம் கிராண்ட்லையன் ஊராட்சி சாமியார்மடம் அருகே உள்ள சென்னை வாழ் நாடார்கள் சங்கத்திற்கு பாத்தியப்பட்ட ஸ்ரீ நல்லழகு நாடார் பாலிடெக்னிக் கல்லூரி மற்றும் டாக்டர் சிவந்தி ஆதித்தனார் மெட்ரிக்குலேஷன் பள்ளி ஆகியவை இணைந்து நடத்திய பெருந்தலைவர் பாரத ரத்னா கு.காமராஜரின் 124வது பிறந்த நாள் விழா ஸ்ரீ நல்லழகு நாடார் பாலிடெக்னிக் கல்லூரி வளாகத்தில் சிறப்பாக கொண்டாடப்பட்டது. சென்னைவாழ் நாடார்கள் சங்கத்தின் தலைவர் மற்றும் காமராஜ் கல்வி மற்றும் ஆராய்ச்சி அறக்கட்டளையின் தலைவர் தங்கமுத்து நாடார் தலைமை தலைமையுரை யாற்றினார்.முன்னதாக சங்க செயலாளர் பிரபுராம் அனைவரையும் வரவேற்றார். சங்க துணைத்தலைவர் செந்தில் முன்னிலை வகித்தார். விழாவிற்கு சிறப்பு அழைப்பாளர்களாக கல்லூரி துவங்கிய ஆண்டின் 19831986 பழைய மாணவர் ஜி.முரளி, தொழில் நுட்ப அலுவலர் மற்றும் கல்லூரியின் 1993 1995 ஆண்டின் பழைய மாணவர் ஆர்.பழனிவேல் ஆகியோர் கலந்து கொண்டு பெருந்தலைவர் காமராஜரின் திருஉருவ சிலைக்கு மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். பின்னர் தேர்வில் வெற்றி பெற்ற பள்ளி மற்றும் கல்லூரி மாணவ மாணவியர்களுக்கும், சென்னையை சுற்றியுள்ள பள்ளிகளுக்கிடையே நடைபெற்ற விளையாட்டு போட்டியில் 2026ல் வெற்றி பெற்ற மாணவ மாணவியர்களுக்கும், 100 சதவீதம் வருகை பதிவு செய்த மாணவர்களையும் பாராட்டி பரிசுகளை வழங்கி சிறப்புரையாற்றினர். இதனைத்தொடர்ந்து தமிழக அரசின் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை அமைச்சர் ஏ.ஸ்ரீநாத் கலந்து கொண்டு காமராஜரின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினர். பின்னர் மாணவர்களை 100 சதவீதம் தேர்ச்சி பெற செய்த ஆசிரியர்களை பாராட்டி பரிசுகளை வழங்கி வாழ்த்துரையாற்றினர். இதில் சங்க முன்னாள் தலைவர் சின்னமணி, பொதுச் செயலாளர் செல்வகுமார், அறக்கட்டளையின் செயலாளர் சுந்தர், பொருளாளர் ராஜாமணி முருகேசப்பாண்டியன், அறக்கட்டளையின் உறுப்பினர் பழனிச்சாமி, துணைத்தலைவர் சிற்றம்பலம் மற்றும் நிர்வாகக் குழு உறுப்பினர்கள், கல்வி குழு உறுப்பினர்கள், செங்குன்றம், புழல், காந்திநகர் ஆகிய நாடார்கள் சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.மேலும் பாலிடெக்னிக் மற்றும் பள்ளி மாணவ, மாணவியர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. முடிவில் கல்லூரியின் முதல்வர் ஜான்சிராணி அனைவருக்கும் நன்றி கூறினார்.




# சிறப்பு மனு முகாம் மூலம் பொதுமக்களின் குறைகளை கேட்டறிந்து புகார் மனு மீது துரித நடவடிக்கை எடுத்து வரும் தேனி மாவட்ட காவல்துறையினர்

தேனி, ஜூலை.17-

தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர்K.S.பிரவீன் கௌதம், உத்தரவின் பேரில் தேனி மாவட்டத்தில் உள்ள அனைத்து காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் காவல் அதிகாரிகள் சிறப்பு மனு முகாம் நடத்தப்பட்டு பொதுமக்களின் குறைகளை கேட்டறிந்து புகார் மனு மீது உரிய விசாரணை செய்து துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.சிறப்பு மனு முகாம் நடத்தப்பட்டு பொதுமக்களின் குறைகளை கேட்டறிந்து புகார் மனு மீது உரிய விசாரணை செய்து நடவடிக்கை எடுத்து வரும் தேனி மாவட்ட காவல்துறையினரின் செயல் பொதுமக்கள் மத்தியில் காவல்துறை நண்பனாகவும், நம்பிக்கையையும் ஏற்படுத்தி இருப்பதாக பொதுமக்கள் தங்கள் நெஞ் சார்ந்த நன்றியை தெரி வித்து வருகின்றனர்.



■ கன்னியாகுமரி மாவட்டம்நாகர்கோவில் மாநகர தெற்கு பகுதி 44வது வார்டு வட்ட தி மு க நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் வட்டச் செயலாளர் .துரைசாமி தலைமையில் பகுதி செயலாளர் . ஜீவா முன்னிலையில் பட்டகசாலியன்விளை பகுதியில் வைத்து நடைப்பெற்றது.கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக கன்னியாகுமரி மாவட்ட தி மு க செயலாளர் ரெ.மகேஷ் ஙிகி,ஙிலி கலந்து கொண்டு தி மு க வளர்ச்சி பணிகள் மற்றும் வருகின்ற உள்ளாட்சித் தேர்தலில் வெற்றி பெறும் வகையில் மேற்கொள்ள வேண்டிய கள பணிகள் தொடர்பான ஆலோசனைகள் வழங்கினார்.மேலும் கடந்த சட்டமன்ற தேர்தலில் தி மு க வேட்பாளருக்காக பணியாற்றிய அனைத்து நிர்வாகிகள் மற்றும் தி மு க உடன் பிறப்புகளுக்கும் நன்றி தெரிவித்தார்.கூட்டத்தில் மாநகர செயலாளர் .ஆனந்த், மாநகர பிரதிநிதி முருகன், தி மு க நிர்வாகிகள் செல்வன், பெருமாள், கிருஷ்ணன், முருகேசன், கண்ணன், ரெஞ்சித் உட்பட பகுதி, வட்ட தி மு க நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், BLA-2, BLC மற்றும் தி மு க நிர்வாகிகள் கலந்து கொண்டனர.



■ கிருஷ்ணகிரி கே ஆர் பி அணையிலிருந்து முதல் போக நெல் சாகுபடிக்காக இடது மற்றும் வலது புற கால்வாய் பாசனத்திற்காக இன்று காலை தண்ணீரை கலெக்டர் தினேஷ்குமார் திறந்துவைத்தார். அருகில் சட்டமன்ற உறுப்பினர்கள் முகுந்தன்,EC. கோவிந்தராஜ்,உதவி செயற்பொறியாளர் சபரிநாதன், வேளாண்மை இணை இயக்குனர் உமா, வேளாண்மை உதவி இயக்குனர் முனி கிருஷ்ணன்,உதவி பொறியாளர் பொன்னி வளவன் உள்பட பலர் உள்ளனர்.




■ திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி ஈச்சங்கால் பகுதியில் பெருந்தலைவர் காமராஜரின் பிறந்த நாளை முன்னிட்டு பள்ளி மாணவ மாணவிகளுக்கு நோட்டு புத்தகம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றன. இந்நிகழ்ச்சிக்கு ஊராட்சி மன்ற தலைவர் ஏற்பாடு செய்திருந்தார் சிறப்பு அழைப்பாளராக திமுக ஒன்றிய கழக செயலாளர் வி.எஸ்.ஞானவேல், தொழிலதிபர் ஆர்.ஆர்.வாசு, சமூக ஆர்வலர் வடிவேல் சுப்பிரமணியம் மற்றும் பொதுமக்கள், வார்டு உறுப்பினர் பழனி மாணவ மாணவிகள் என கலந்து கொண்டனர் நிகழ்ச்சி மொழிகளில் தேசப்பற்று விழிப்புணர்வு சங்கர் நன்றியுரை கூறி அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

# உங்களை தேடி உங்கள் ஊரில் திட்டத்தின் கீழ், கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் .மு.பிரதாப், பொதுமக்களின் கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டு, மனுக்கள் மீது உடனடி நடவடிக்கை மேற்கொள்ள துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தல்



கன்னியாகுமரி, ஜூலை.17-

உங்களை தேடி உங்கள் ஊரில் திட்டத்தின் கீழ் கன்னியாகுமரி மாவட்டம் அகஸ்தீஸ்வரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் .மு.பிரதாப், அகஸ்தீஸ்வரம் வட்டத்திற்குட்பட்ட பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டு தெரிவிக்கையில் தமிழ்நாடு முதலமைச்சரின் உங்களை தேடி உங்கள் ஊரில் திட்டமானது செயல்படுத்தப்பட்ட வருகிறது. அதனடிப்படையில் அகஸ்தீஸ்வரம் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு வருகை தந்த பொதுமக்கள் மகளிர் உரிமைத்தொகை, சாதி சான்றிதழ், வருமான சான்றிதழ், இருப்பிட சான்றிதழ், சாலை சீரமைப்பு, மின்சார வசதி, குடிநீர் இணைப்பு, குளங்களை தூர்வாருதல், பேருந்து வசதி, முதியோர் உதவித்தொகை ஆக்கிரமிப்புகளை அகற்றுதல், இலவச வீட்டுமனை பட்டா, குடும்ப அட்டையினை வறுமைக்கோட்டுக்கு கீழ் மாற்றுதல், வேளாண்மை துறை மற்றும் தோட்டக்கலைத்துறை சார்பாக விவசாயிகளுக்கு உதவித்தொகை வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கை மனுக்களை அளித்துள்ளார்கள்.மேலும் தகுதியான அனைத்து கோரிக்கை மனுக்கள் மீது உடனடி நடவடிக்கை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப், தெரிவித்தார்.நடைபெற்ற நிகழ்வில் அகஸ்தீஸ்வரம் வட்டாட்சியர் ஆறுமுகம், சமூகபாதுகாப்பு திட்ட தனிவட்டாட்சியர் கோலப்பன், வருவாய் ஆய்வாளர்கள், துறை சார்ந்த அலுவலர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# தேவகோட்டை ஜெமித்தார் உயர்நிலைப் பள்ளியில் கல்வி வளர்ச்சி நாள் விழா

தேவகோட்டை, ஜூலை.17-

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை ஜெமிந்தார் உயர்நிலைப் பள்ளியில் கல்வி வளர்ச்சி நாள் விழாபட்டதாரி ஆசிரியர் நந்தினி தலைமையில் நடைபெற்றது. முன்னாள் முதலமைச்சர் காமராஜர் திருவுருவப் படத்திற்கு பட்டதாரி ஆசிரியர் நந்தினி மாலை அணிவித்தார்.6 முதல் 10ம் வகுப்பு மாணவர்களுக்குப் பேச்சுப்போட்டி, கட்டுரைப் போட்டி, ஓவியப்போட்டி வெகு சிறப்பாக நடைபெற்றது.பேச்சுப்போட்டியில் 10ம் வகுப்பு மாணவர் கமலேஷ் முதல்பரிசும், 6ம் வகுப்பு மாணவர் பிரதாப் இரண்டாம் பரிசும் பெற்றார்கள். ஓவியப்போட்டியில் 10ம் வகுப்பு மாணவர்சரண் முதல்பரிசும், 8ம் வகுப்பு மாணவர் ராஜன் இரண்டாம் பரிசும் பெற்றார்கள். போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பட்டதாரி ஆசிரியர்கள் அஜிதா, செல்வி ஜெனிபர் நந்தினி ஆகியோர் பரிசுகள் வழங்கினார்கள்.பட்டதாரி ஆசிரியை அஜிதா நன்றி உரை ஆற்றினார் நாட்டுப்பண்ணுடன் இனிதே நிறைவு பெற்றது.



# சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை பொது அறுவை சிகிச்சைத் துறைக்கு, ராமநாதபுரம் ஈஸ்ட் கோஸ்ட் ரோட்டரி சங்கம் சார்பில் ரூ.3.18 லட்சம் மதிப்பிலான 10 ஏபிஎஸ் ஃபவுலர்ஸ் கட்டில்கள் மற்றும் மெத்தைகள் நன்கொடையாக வழங்கப்பட்டன



சிவகங்கை ஜூலை.17-

இந்நன்கொடை திட்டம் ரோட்டரி இன்டர்நேஷனல் மாவட்டம் 3212இன் District Grant DG2684828 (2025–26) திட்டத்தின் கீழ், The Rotary Foundation ஆதரவுடன் செயல்படுத்தப்பட்டது. நிகழ்ச்சியில் Rotary International District 3212இன் மாவட்ட ஆளுநர் (2025–26) IPDG ரோட்டேரியன் ஜெ. தினேஷ் பாபு சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, பவுலர்ஸ் கட்டில்களை மருத்துவமனைக்கு நன்கொடையாக வழங்கினார்.இந்நிகழ்ச்சி சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் டாக்டர் ஆர். செல்வராஜன், MD. அவர்களின் தலைமையிலும், பொது அறுவை சிகிச்சைத் துறை பேராசிரியரும் துறைத் தலைவருமான டாக்டர் எஸ். திருமலை கண்ணன், MS. அவர்களின் முன்னிலையிலும் மற்றும் மருத்துவமனை கண்காணிப்பாளர் Dr. தமிழ்வாணன்,MD, துணை முதல்வர் Dr. விசாலாட்சி MD, உள்ளிருப்பு மருத்துவர் Dr.முகமது ரஃபிக், DPM ஆகியோர் பங்கு பெற்றனர். நிகழ்ச்சியில் ராமநாதபுரம் ஈஸ்ட் கோஸ்ட் ரோட்டரி சங்கத்தின் தலைவர் (2026–27) ரோட்டேரியன் டாக்டர் ரம்யா தினேஷ், உடனடி முன்னாள் தலைவர் (2025–26) ரோட்டேரியன் எஸ். ஜெகன் அகிலன், செயலாளர் (2026–27) ரோட்டேரியன் T. சௌந்தர்யா, செயலாளர் (2025–26) ரோட்டேரியன் டாக்டர் ஏ. ஜே. முகம்மது ரஃபி ஆகியோர் கலந்து கொண்டனர்.இந்த நவீன ஃபவுலர்ஸ் கட்டில்கள் அறுவை சிகிச்சைக்குப் பிந்தைய நோயாளிகளின் சிகிச்சை மற்றும் பராமரிப்புத் தரத்தை மேம்படுத்துவதோடு, அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெறும் ஏழை மற்றும் எளிய மக்களுக்கு பெரிதும் பயனளிக்கும் என மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்தது



# கையில் புத்தகம் அல்ல... கடப்பாரை!

## பள்ளி நேரத்தில் மாணவர்களை கூலித் தொழிலாளர்களாக பயன்படுத்தியதாக பரபரப்பு - நடவடிக்கை எடுப்பாரா மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்?

மதுரை, ஜூலை.17-

மதுரை மாநகர் மதிச்சியம் பகுதியில் செயல்பட்டு வரும் தனம் அரசு உதவி பெறும் நடுநிலைப்பள்ளியில், பள்ளி நேரத்திலேயே மாணவர்களை கட்டுமானப் பணிகளில் ஈடுபடுத்தியதாகக் கூறப்படும் சம்பவம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

பள்ளி வளாகத்தில் நடைபெற்று வரும் பணிகளின் போது, மாணவர்களின் கைகளில் புத்தகங்களுக்கு பதிலாக கடப்பாரை, மண்வெட்டி உள்ளிட்ட கருவிகள் கொடுக்கப்பட்டு வேலை வாங்கப்பட்டதாக வெளியாகியுள்ள தகவல்கள் மற்றும் புகைப்படங்கள் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன. கல்வி கற்க வேண்டிய மாணவர்கள் பள்ளி நேரத்தில் உடல் உழைப்பில் ஈடுபடுத்தப்பட்டிருந்தால், அது குழந்தைகளின் உரிமைகளுக்கும் கல்வி





விதிமுறைகளுக்கும் எதிரான செயலாகும் என சமூக ஆர்வலர்கள் கண்டனம் தெரிவித்து வருகின்றனர். இந்த விவகாரம் குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக விசாரணை நடத்தி, உண்மை நிலையை வெளிக் கொணர வேண்டும் என்றும், தவறு உறுதி செய்யப்பட்டால் பொறுப்புடையோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பெற்றோர்கள் மற்றும் பொதுமக்கள் வலியுறுத்தியுள்ளனர். மாணவர்களின் பாதுகாப்பு மற்றும் கல்வி உரிமையை உறுதி செய்யும் வகையில், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் உடனடியாக விசாரணை நடத்தி உரிய நடவடிக்கை எடுப்பாரா? என்ற கேள்வி தற்போது கல்வி வட்டாரங்களிலும் பொதுமக்களிடையிலும் எழுந்துள்ளது.



■ மதுரை மாநகராட்சி, மாட்டுத்தாவணி பேருந்து நிலையத்தில் இலவச கழிப்பறை வசதி மற்றும் தூய்மை பணிகள் குறித்து மாநகராட்சி ஆணையாளர் கௌரவ் குமார், இ.ஆ.ப., , நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். அருகில் சுகாதார அலுவலர் ராஜ்கண்ணன் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உடன் இருந்தனர்.





■ திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டத்திற்குட்பட்ட கந்திலி கிராமத்தில் அமைந்துள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில் பல்வேறு துறைகளின் சார்பில், 121 பயனாளிகளுக்கு ரூ.65.86 இலட்சம் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சியர் கு.ரவிகுமார்,இ.ஆ.ப., (15.07.2026) அன்று வழங்கினார். உடன் மாவட்ட ஊராட்சிக் குழுத்தலைவர் என்.கே.ஆர்.சூரியகுமார், கந்திலி ஒன்றியக் குழு தலைவர் திருமதி திருமுருகன், தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) சதீஷ்குமார், வருவாய் கோட்டாட்சியர் வரதராஜன், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.



# பாபா மெட்ரிக்குலேஷன் பள்ளியில் கல்வி வளர்ச்சி நாள் விழா

மானாமதுரை, ஜூலை.17-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை பாபா மெட்ரிக்குலேஷன் பள்ளியில் கர்மவீரர் காமராஜரின் பிறந்தநாளை முன்னிட்டு கல்வி வளர்ச்சி நாள் விழா நடைபெற்றது.

விழாவில் மாணவர்கள் காமராஜர் வேடமணிந்து அவரது வாழ்க்கை வரலாறு, கல்விக்கான பங்களிப்பு மற்றும் எளிமையை எடுத்துரைத்து பேச்சு, கவிதை, பொன்மொழி, நடனம், நாடகம் உள்ளிட்ட நிகழ்ச்சிகளில் பங்கேற்றனர். சிறப்பாக பங்கேற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. நிகழ்ச்சியில் பள்ளி நிறுவனர் பி. ராஜேஸ்வரி, தாளாளர் ஆர். கபிலன், நிர்வாகி ஆர். மீனாட்சி, முதல்வர் எம். சாரதா, ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.





# மதுரையில் 'YiFi 2026' தொழில்முனைவோர் திருவிழா:600க்கும் மேற்பட்ட தொழில்முனைவோர் பங்கேற்பு

மதுரை, ஜூலை.17-

இந்திய தொழில் கூட்டமைப்பின் (CII) இளம் தொழில்முனைவோர் பிரிவான யங் இந்தியன்ஸ் (Young Indians) சார்பில் நடத்தப்படும் தென் இந்தியாவின் மிகப்பெரிய தொழில்முனைவோர் உச்சிமாநாடான 'YiFi 2026' மதுரையில் (ஜூலை 17) தொடங்கி, 18ம் தேதி வரை இரண்டு நாட்கள் நடைபெறுகிறது."எல்லைகளைத் தாண்டிய தொழில்முனைவு" என்ற கருப்பொருளில் நடைபெறும் இந்த மாநாட்டில், நாடு முழுவதும் உள்ள 71 யங் இந்தியன்ஸ் கிளைகளைச் சேர்ந்த 600க்கும் மேற்பட்ட தொழில்முனைவோர், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் பிரதிநிதிகள், முதலீட்டாளர்கள் மற்றும் தொழில் வல்லுநர்கள் பங்கேற்கின்றனர். மாநாட்டில் செயற்கை நுண்ணறிவு (AI), ஸ்டார்ட்அப் வளர்ச்சி, உலகளாவிய சந்தை வாய்ப்புகள், முதலீட்டு உத்திகள், தொழில்நுட்ப புதுமைகள் உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளில் முன்னணி தொழில் நிபுணர்கள் உரையாற்றுகின்றனர். மேலும், புதிய வணிக கூட்டாண்மைகளை உருவாக்கும் வகையில் கருத்தரங்குகள், கலந்துரையாடல்கள் மற்றும் நெட்வொர்க்கிங் நிகழ்ச்சிகளும் நடைபெறுகின்றன.இந்த மாநாடு தமிழகத்தில் தொழில்முனைவு சூழலை மேலும் வலுப்படுத்துவதுடன், இளம் தொழில்முனைவோருக்கு புதிய வாய்ப்புகளை உருவாக்கும் முக்கிய தளமாக அமையும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.



■ மதுரை மாவட்டம், உங்களைத் தேடி உங்கள் ஊரில் திட்டத்தின் கீழ் பேரையூரில் உள்ள டி.இ.எல்.சி. தொடக்கப்பள்ளியில் செயல்படுத்தப்பட்டு வரும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் கீழ் மாவணமாணவியருக்கு வழங்கப்பட்டு வரும் உணவின் தரம், சுகாதராம் மற்றும் உணவு தயாரிப்பு முறைகளை மாவட்ட ஆட்சித்தலைவர்நிஷாந்த் கிருஷ்ணா இ.ஆ.ப., ஆய்வு செய்தனர். உசிலம்பட்டி சார் ஆட்சியர் உட்கார்ஷ் குமார் இ.ஆ.ப., உடன் உள்ளார்.







Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161